**SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA**

**CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING (CEDPL)**

# BACHELOR OF ARTS (GENERAL) EXTERNAL DEGREE

The application for the above mentioned programme will be entertained by the University until **30.05.2015.**

## Who can apply?

Minimum qualification for the entry to BA (General) degree (external) shall be:

1. At least three passes in all three approved subjects in one sitting at G.C.E. (A/L) where a minimum marks of 30% or the marks which is determined by UGC in Common General Test. UGC will issue minimum Z score on an annual basis. This Z score will be used to determine the eligibility of candidates to follow the external degree programme.

Or

2. Any other qualification acceptable to the Senate of SEUSL and in accordance with section 3.1 of the UGC Sri Lanka, handbook on External Degrees and Extension Courses, 1st December, 2010.

## Application Procedure

Program details with application from could be obtained at CEDPL or by sending a self-addressed stamped **(Rs.35/-)** envelop **(A4 / B5)** to the Assistant Registrar, Centre for External Degrees and Professional Learning or could be downloaded from the www.seu.ac.lk.

Application processing fee of **Rs. 1,000/=** should be paid through University PIV at any branch of **People's Bank** in favour of **Bursar, South Eastern University of Sri Lanka**, **A/C No. 228-1001-40042429** and the paying slip should be sent along with the duly filled application form.

## Deadline

Duly filled application form should be submitted on or before **30.05.2015** to **Assistant Registrar, CEDPL, South Eastern University of Sri Lanka, Oluvil.** The incomplete or late application will be rejected.

**Acting Registrar**

South Eastern University of Sri Lanka

10.04.2015

## இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம்

# கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டம்

மேலே குறிப்பிட்ட பட்டப்படிப்புக்கு மாணவர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் **30.05.2015** வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

கலைமாணி (பொது) வெளிவாரி பட்டநிகழ்ச்சித் திட்டத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

01. க.பொ.த.(உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் ஆகக்குறைந்த சித்திகளுடன் பொதுச் சாதாரணப் பரீட்சையில் குறைந்தபட்சம் 30% புள்ளிகளை அல்லது காலத்திற்குக் காலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் புள்ளியினைப் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்கையில் வருடந்தோறும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் Z புள்ளிகள் கருத்திற்கொள்ளப்படும்.

    **அல்லது**

02. இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய தகைமைகள். அத்தகைமைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 01.12.2010 ஆம் திகதி வெளியிடப்பட்ட வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் விரிவாக்கக் கற்கைநெறிகள் தொடர்பான கைநூலின் 3.1 பிரிவுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளல்**

விண்ணப்பப்படிவத்துடன் பட்டநிகழ்ச்சித் திட்டம் தொடர்பான மேலதிக தகவல்களையும் வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தில் நேரடியாகவோ அல்லது சுயவிலாசமிடப்பட்டு முத்திரையிடப்பட்ட **(Rs.35/-)** தபாலுறையை **(A4 / B5)** குறித்த நிலையத்தின் உதவிப் பதிவாளருக்கு அனுப்புவதன் மூலம் அல்லது பல்கலைக்கழக இணையத்தளமான www.seu.ac.lk இலும் பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பத்தினை செயற்படுத்துவதற்கான கட்டணமாக **ரூபா. 1000.00** அறவிடப்படும். இக்கட்டணத்தினை எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் பல்கலைக்கழக பற்றுச் சீட்டு (PIV) ஊடாக செலுத்தலாம். கட்டணங்கள் **நிதியாளர், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், வங்கிக் கணக்கு இல: 228-1001-40042429** இற்கு வரவுவைக்கப்பட வேண்டும். கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டினை கழராதபடி விண்ணப்பப்படிவத்தில் ஒட்டவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி**

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய இறுதித் திகதி **30.05.2015** ஆகும். அதற்கமைய முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை **30.05.2015** அன்று அல்லது அதற்கு முன்னர் உதவிப்பதிவாளர், வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக நேரடியாகவே அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்புதல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதில் பதிவாளர்**

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

10.04.2015